**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 66/2025 - PW-11**

| | |
|---|---|
| Name | திரு.பரந்தாமன் |
| Husband/Father Name | ஏகாம்பரம் |
| Village /Area | ஜாகிர்தண்டலம்கண்டிகை |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.02.2026.

**(எதிரிகள் 2,3,5 ஆஜர். எதிரி 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 19.01.2025 அன்று காலையில் நானும் என் அக்கா மகன் ஜகன் என்பவரும் 8.15 மணிக்கு அரிசி வாங்குவதற்காக பனப்பாக்கம் சென்றோம். போகும் வழியில் தென்மாம்பாக்கம் தாபா ஓட்டலருகே சுமார் 10 போலீசார்கள் இருந்தார்கள். அப்போது நாங்கள் அங்கு சென்று பார்த்த போது நவீன் என்பவரும் மணிகண்டன் என்பவரையும் திருமால்பூரில் பெட்ரோல் ஊற்றி கொளுத்திய வழக்கு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது மணிகண்டனும் நவீன் என்பவரும் நாங்கள் தான் தமிழரசன் மற்றும் விஜயகணபதி மீது பெட்ரோல் ஊற்றி கொளுத்தினோம் என்று எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார்கள். அப்போது மணிகண்டன் என்பவர் தன்னிடம் இருந்த இருசக்கர வாகனம் Hero Splendor போலீசாரிடம் ஆஜர் படுத்தினர். அதை கைப்பற்றுதல் மகஜரில் போலீசார் கைப்பற்றினார்கள். அப்போது ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் ஜகனும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் மணிகண்டன் மற்றும் நவீனுடைய ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரு சக்கர

வாகனம் Hero Splendor plus வாகனம் தான் எதிரி மணிகண்டனமிருந்து கைப்பற்றினார்கள். அது **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய சொந்த ஊர் ஜாகிர்தண்டலம்கண்டிகை. மேற்படி தாபா தென்மாம்பாக்கம் ஏரிக்கரையின் மீது இருந்தது. தாபாவுக்கும் நாங்கள் இருக்கும் இடத்துக்கும் இடைப்பட்ட தொலைவு 3கி.ம இருக்கும். நான் வீட்டிலிருந்து காலை 8.05 க்கு கிளம்பி அரிசி வாங்குவதற்காக சென்றேன். காலை 8.12 மணிக்கு போலீசார் விசாரித்து கொண்டிருந்த இடத்துக்கு வந்தேன்.

தாபாவில் காலை என்பதால் அங்கு பொது மக்கள் 10 பேர் போலீசார் 10 பேர் இருந்தார்கள். நான் செல்வதற்கு முன்பே மேற்படி பொதுமக்களும் போலீசாரும் இருந்தார்கள். எதிரிகளை போலீசார் விசாரித்து கொண்டிருக்கும் போது பொது மக்களும் அங்கே இருந்த போது நான் அந்த இடத்துக்கு வந்தேன். நான் செல்லும் போது பொது மக்கள் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்த இடத்திலிருந்த 10 அடி தொலைவில் இருந்தார்கள்.

நான் செல்வதற்கு முன்பு போலீசார் எதிரிகளை பொது மக்கள் முன்னிலையில் விசாரித்த விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் செல்வதற்கு முன்பு போலீசார் விசாரணையில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகளை விசாரிக்கும் போது மணிகண்டனும், நவீனும் தான் பெட்ரோலை ஊற்றி நாங்கள் தான் கொளுத்தினோம் என்று எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

மேற்படி மணிகண்டன் மற்றும் நவீனுக்கும் நான் யார் என்பது பற்றியும் அவர்கள் யார் என்ற விவரமும் எனக்கும் தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் சொல்லிதான் எதிரிகளின் பெயர் எனக்கு தெரியும். காலை 8.12 முதல் போலீசார் எதிரிகளை 10 மணி வரை விசாரித்தார்கள்.

மேற்படி 2 மணி நேரம் எதிரிகள் என்ன என்ன கூறினார்கள் என்ற முழு விவரத்தையும் பேப்பரில் எழுதினார்கள் என்றால் சரிதான். பானாவரம் காவல் ஆய்வாளர் தான் எழுதினார். முதலில் நான் செல்லும் போது ஒரே ஒரு பேப்பரில் எழுதிக் கொண்டிருந்தார்கள் பிறகு மடிக்கணினியில் தட்டச்சு செய்தார்கள். மடிக்கணினியில் எத்தனை பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்று விவரம் எனக்கு தெரியாது. எத்தனை பக்கங்கள் print எடுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது.எழுதப்பட்ட பக்கங்கள் எத்தனை மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்கள் எத்தனை என்பது எனக்கு தெரியாது. நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன்.

மொத்த பக்கங்களிலும் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. காரணம் எனக்கு படிக்க தெரியாது. நான்

கையொப்பம் இட்ட தாள்களில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் எதிரிகள் கூறிய வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் இட்டேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு கையொப்பத்தையும் வண்டியை கைப்பற்றும் போது மற்றொரு கையொப்பத்தையும் போட்டேன். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்றால் காலை 8.17 மணிக்கு ஆரம்பித்து காலை 10 மணிக்கு முடிக்கப்பட்டது.

முதலில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். காலை 8.17 மணிக்கு என்னிடம் ஒரு கையொப்பத்தை வாங்கினார்கள். வண்டியை காலை 9.50 மணிக்கு பிடித்து 9.55 மணிக்கு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

முதலில் மணிகண்டனை போலீசார் விசாரித்தார்கள். அப்போது காலை 8.14 மணி இருக்கும். 8.14 மணியிலிருந்து ஒரு 5 நிமிடம் போலீசார் விசாரித்திருப்பார்கள். நான் செல்வதற்கு 5 நிமிடதற்கு முன்பு போலீசார் யார் யாரை விசாரித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆகையால் நான் சென்ற பிறகு என் முன்னிலையில் விசாரித்த 5 நிமிடம் பற்றி மட்டும் தான் தெரியும்.

எதிரி நவீனை காலை 8.22 மணிக்கு ஆரம்பித்து 20 நிமிடம் விசாரித்து 8.42 மணிக்கு முடித்தார்கள். மேற்படி மணிகண்டனையும் நவீனையும் விசாரித்து கொடுத்த வாக்குமூலங்களை பெண் உதவி ஆய்வாளர் தான் மடிக்கணினியில் பதிவு செய்தார். எனக்கு படிக்க தெரியாததால் மடிக்கணினியில் என்ன விவரம் தட்டச்சு செய்யப்பட்டது தெரியாது என்று சொன்னால் சரிதான்.

கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்பது பற்றி எனக்கு தெரியாது. தட்டச்சு செய்த வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் எங்கு சென்று print எடுத்து வந்தார் என்று எனக்கு தெரியாது. தாபாக்கு முன்னால் உள்ள வளைவு அருகே போலீசார் எதிரிகளை விசாரித்தார்கள்.

தாமல் மற்றும் பனப்பாக்கம் இரண்டும் பிரியும் இடத்தில் போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். மேற்படி இடத்துக்கும் தாபாவுக்கும் இடைப்பட்ட தொலைவு 300மீ. அதற்கு பக்கத்தில் ஈஸ்வரி மனைபிரிவு போடப்பட்டுள்ளது என்றால் இரு பக்கங்களிலும் மனை பிரிவு உள்ளது ஆனால் அதன் பெயர் தெரியாது.

பனப்பாக்கத்தில் அரிசி கடை காலை 7 மணிக்கே திறந்து விடுவார்கள். காவல் நிலையத்தில் தான் போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் அதனால் தான் எனக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை விசாரித்த இடத்தில் தான் போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

எனக்கு படிக்க தெரியாது என்றாலும் நேரம் பார்க்க தெரியும் நான் வீட்டை விட்டு நேரத்தை பார்த்தேன். நான் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்து இடத்துக்கு வந்த போது எனது மாமனார் என்னை தொடர்பு கொண்டு பேசியதால் எனக்க நியாபகம் உள்ளது.

எனக்கு மாமனார் போன் செய்யவும் நான் அந்த இடத்துக்கு செல்லவும் இல்லை நான் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் இட்டேன் என்றும் எதிரிகளை விசாரித்த இடத்தில் கையொப்பம் இட்டேன் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.20 19:15:30 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.